**OUR LATEST**

# "THYAGA BHOOMI"

*Featuring*

## Srimathi S. D. SUBBULAKSHMI

BABY SAROJA & PAPANASAM SIVAN

---

Sri Ranjani's

# "SAKTHI MAYA"

*Featuring*

Members of the Shining Stars Society

---

**PICTURES READY FOR BOOKING**

1. Naveena Satharam
2. Bhaktha Kuchela
3. Balayogini
4. Ammanji & Kausalya Parinayam
5. Seva Sadan
6. Vanrajkarzan
7. Raja Sekharan & Emantha Sonagiri
8. Rukmani Kalyanam

(1–8) In Tamil.

9. Fighting Mariners (Mascot Serial) In English.
10. Bhaktha Cheta Master Mohan & Ratnaprabha (In Hindi)




ஸ்ரீரஞ்சினி டாக்கி டிஸ்டிரிபியூடர்ஸாரின்

## அடுத்த படம்?

The Jupiter Press, Madras.

அழைத்துச் செல்கிறார். திருவெண்காடர், சிவகலை, ஞானகலை முதலியோர் அவ்வந்தண தம்பதிகளை ஆசனத்தமர்த்தி உபசரிக்கின்றனர். அவர்களின் விருப்பின்படி சிவசருமர் அக்குழந்தையை ஓர் துலாத்தட்டில் வைத்து, அதன் இடைக்குச் சரியான பொன் பெற்று ஈசனும் குழந்தையை அவர்களிடம் ஒப்புவிக்கின்றனர். இதனைக்கண்ட திருவெண்காடரின் தமக்கையாம் மீனாக்ஷி தனது மக்களில் ஒன்றை தனது சகோதரன் சுவீகாரஞ் செய்துக் கொள்ளச் செய்யாது ஓர் அயலானது பிள்ளையை ஏராளப் பொன் கொடுத்துப் பெறச் செய்ததாக சேந்தனாரைக் கடிந்து பேசி நிந்திக்கிறாள். சிவசருமரும் சுசீலையும் திருவெண்காடர் சிவகலை முதலியோரின் விடைபெற்று அவர்களது வண்டியிலமர்ந்து மருதூருக்குச் செல்கிறார்கள். மருதூர் ஈசன் அருள் பிரசாதமான அக்குழந்தைக்கு மருதவாணன் என்னும் நாமம் வழங்கப்படுகிறது. மருதவாணன் பதினாறு வயதடைகிறான். ஓர் நாள் அவன், தனது தோழர்கள் சோமேசன், சுந்தரேசன் முதலியவர்களுடன் படகிலேறி வேடிக்கையாய் கடலில் போகுந்தருணம் ஓர் பெரிய மீன் நீரிலிருந்து வெளிவந்து சுந்தரேசனது கால்களைப் பற்றியிழுத்து, நீருள் அமிழ்ந்து அவனை விழுங்குகிறது. இதனைக் கண்ட மருதவாணன், கடலில் குதித்து நீருள்மூழ்கி மீனுடன் போராடி, அதைக்கொன்று, சுந்தரேசனை மீட்டு, மீனுடன் வெளிவந்து கரைசேர்கிறான். இறந்த மீன் மாயமாய் மறைய, பூர்வத்தில் சாபத்தால் மீன் வுருவமாயிருந்த மணிக்கிரீவன் சாபவிமோசன மடைந்து, தன் சுயரூபத்துடன்தோன்றி, மருதவாணனின் ஆசிபெற்று மறைகிறான். காவிரிப்பூம் பட்டினத்துச் செட்டிப்பிள்ளைகளில் சிலர் வியாபார நிமித்தம் கப்பலேறி கடல் பிரயாணஞ் செல்வதை யறிந்த மருதவாணன், தனது தாய் தந்தையர் அனுமதி பெற்று அவர்களுடன் கப்பலேறிக் கடல் பிரயாணஞ் செல்கிறான். அவன் சென்று, இரண்டு மாதங்கள் கடந்தும், திரும்பிவாராததால் திருவெண்காடர் மனக்கலக்க முறுகிறார். இச்சமயம் அவரது காவலனான குமரு பிரவேசித்து, மருதவாணன் ஏறிச் சென்ற கப்பல் துறைமுகத்திற்குத் திரும்பிய சேதியை அறிவிக்கிறான். உடனே அவனுடன் பிரயாணஞ் செய்த செட்டிப் பிள்ளைகளில் ஒருவனான மாணிக்கஞ் செட்டி பண்டகசாலை யடைந்து, திருவெண்காடரைக் கண்டு, மருதவாணன் திரும்பி விட்டதாயும், கப்பல் சுதேசம் திரும்பும் மார்க்கத்தில் புயல் காற்றில் அகப்பட்டுத் தத்தளிக்கும் சமயம், அவன் வியாபாரத்தில் சம்பாதித்த திரவிய மனைத்தையும் தரும வினியோகஞ் செய்து, அவன் கொண்டு வந்த எரிமுட்டைகளில் சிலவற்றைக் கேட்டபோது அவர்களிடம் பத்திரங்கள் எழுதி வாங்கிக்கொண்டு பேருக்கு ஒரு எரிமுட்டை கொடுத்ததால் ஒருக்கால் அவன் சித்தம் பேதமடைந்திருக்கக்கூடும் என அறிவித்துச் செல்கிறான்.

திருவெண்காடர் மனக்கலக்க மடைகிறார். இச்சமயம் மருதவாணன் பிரவேசிக்க, திருவெண்காடர் அடங்கா மகிழ்ச்சியுற்று

அவனை அன்புறத்தழுவி அவனது வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் சிவகலைக்கும், ஞானகலைக்கும் ஆறுதல் அளிக்க வீட்டிற்குச் செல்லும்படி கூறி யனுப்புகிறார். மருதவாணன் கொண்டுவந்த ஓர் பெட்டியையும் இரு மூட்டைகளையும் துறைமுகத்துக் கணக்குப்பிள்ளை கொண்டுவருகிறான். திருவெண்காடர் அப்பெட்டியைத் திறந்து பார்க்க, அதில் மூன்று வறட்டிகளும், ஓலைச்சுருள்களு மிருக்கக்கண்டு, அவ்வறட்டிகளை வீசியெறிகிறார். அவைகளிலிருந்து இரத்தினங்கள் சிதறுகின்றன. திருவெண்காடர் அவைகளைக்கண்டு வியப்புற்று, மூட்டைகளை அவிழ்த்துப்பார்க்கச், அவைகளில் தங்க மணல் நிறைந்திருப்பதைக் காண்கிறார். அவர், தனது மகனென வளர்ந்த மருதவாணன் ஈசனே என உணராது மோசம் போனதாய் கதறி அவரை நாடி வீட்டிற்கு விரைந்து செல்கிறார். மருதவாணர் ஓர் சிறு பெட்டியை சிவகலையிடம் கொடுத்து அதை அவரது தந்தையிடம் கொடுக்கும்படிக்கூறி மறைகிறார். திருவெண்காடர் வீட்டையடைந்து, மருதவாணரைக்காணாது, மனம் வருந்த, சிவகலை அவர் கொடுத்துச்சென்ற ஓர்சிறுபெட்டியை அவளது கணவனிடம் கொடுக்கிறாள். அதில் ஓர் காதற்ற ஊசியும் "காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே" என வரையப்பெற்ற ஓர் ஓலை நறுக்குமிருப்பது கண்டு, மகனென வந்த மருதவாணன் தன்னைத்தடுத்தாட்கொள்ள வந்த ஈசனே என வுணர்ந்து, ஞானோதயம் பெற்று, ஆடையாபரணாதிகளைக் களைந்தெறிந்து ஓர் துண்டு வஸ்திரம் தரித்து துறவறம் பூண்கிறார். சிவகலை, ஞானகலை, சேந்தனார் முதலியோர் அவரைத்தடுத்தும், பயனில்லாததால், அவரது பிரிவையாற்றாது வருந்துகின்றனர். அவர் அவர்களுக்குத் தேறுதல் கூறி, அவரது திரவிய மனைத்தையும் தானதருமங்களில் செலவிட்டு மீதியை ஊராருக்கு வாரியிறைக்கும்படி சேந்தனாருக்கு உத்தரவிட்டு வீட்டை விட்டு வெளியேறுகிறார். அவர் துறவியாய் தெருக்களில் திரிந்து பிக்ஷையேற்றுண்பது குலத்திற்கு இழிவு எனக்கருதிய அவரது தமக்கையாம் மீனாக்ஷி, அவரைக் கொல்லக்கருதி, விஷம் கலந்த அப்பத்தை உண்ணும்படி அவரிடம் கொடுக்க, அவர் அதை அவளது வீட்டுக்கூறைமீது யெறிகிறார். வீடு தீப்பற்றி எறிய அவள் தனது குற்றத்தை மன்னிக்கும்படி அவரது பாதங்களில் வீழ்ந்து வேண்ட அவர் அவளை மன்னித்து தீயணையச் செய்து செல்கிறார். குடியிருந்த வீட்டிற்குக் கொள்ளி வைக்காமல் அந்நகர் எல்லையை விட்டுத் தாண்டமாட்டேன் என அவரது தாயார் ஞானகலைக்கு வாக்களித்ததைக் காப்பாற்ற, அவர் அவ்வூர் பொது மடத்தில் நிஷ்டை கூடியிருக்கும் ஓர் நாளில், அவரது தாயார் இறந்து, சவத்தை சுடலைக்கு அவரது உறவினர் எடுத்தேகுவதை ஞான திருஷ்டியால் உணர்ந்து, சுடலைக்குச் சென்று, வாழைமரப்பட்டைகளைக் கொண்டு சிதைபடுக்கச் செய்து, அதன் மீது அவரது தாயார் பிரேதத்தை யமர்த்தி, ஈசனது ஜோதியால் அனல் மூட்டி, தகனம் புரிந்து, அந்நகரைவிட்டுச் செல்கிறார். அவ் வழியில், ஓர் இரவில், பசியால்

வருந்த, அச்சமயம் அக்கிராமத்திலுள்ள எல்லா வீடுகளும் மூடப்பட்டிருக்க, ஓர் வீட்டில் மாத்திரம் விளக்கு வெளிச்சமிருப்பது கண்டு, அவ்வீட்டுவாயிலிலிருந்து எட்டிப்பார்க்க, அவ்வீட்டுக் குடியானவன் அவரைக் கள்வனென மதித்து ஓர் தடிகொண்டடிக்கிறான். அக்கம்பக்கத்தார் பிரவேசித்து அடியுண்டவர் திருவெண்காட்டடிகள் என தெரிவிக்க, குடியானவன், அவரது அடிபணிந்து மன்னிப்பைப் பெற்று செல்கிறான். அவர் ஏகாந்த யிடம் நாடி காட்டிலுள்ள ஓர் விநாயகர் ஆலயத்துள் சென்று நிஷ்டையிலமர்கிறார்.

பத்திரகிரி மன்னனது அரண்மனையில் நகைகளைக் கொள்ளையிட்டுத் திரும்பிய கள்ளர்கள் தங்கள் வேண்டுதலின்படி ஓர் நகையை விநாயகர் மீது வீசி யெறிகின்றனர். அது பட்டினத்தாரின் கழுத்தில் வீழ்கிறது. களவுபோன நகைகளில் ஒன்று அவர் கழுத்திலிருப்பதைக் கண்ட சேவகர்கள் ராஜாங்க நகைகளை களவாடிய கள்ளன் என அவரை எண்ணி, அவரைப்பிடித்துக் கொண்டுபோய் அரசனெதிரில் நிறுத்துகின்றனர். அவ்வரசன் அவரைக் கழுமரத்திலேற்றி விடும்படிக் கட்டளையிடுகிறான். சேவகர்கள் அவரை யழைத்துச் சென்று, கழுமரத்தில் நிறுத்துகின்றனர் கழுமரம் தீப்பற்றி எரிகிறது. இச்சேதியறிந்த பத்திரகிரி மன்னன் தனது மனைவி, மகன் சகிதம் அவ்விடம்வந்து, திருவெண்காடர் ஓர் மஹான் என உணர்ந்து, அவரடிபணிந்து, தன்னை அவரது தொண்டனாய் ஏற்றுக்கொள்ளும்படி வேண்ட, அவர் அவனது வேண்டுகோளுக்கிசைந்து, திருவிடைமருதூருக்குச் சென்றிருக்கும்படியும், அங்குவந்து அவர் அவனைக் சந்திப்பதாயும் கூற, அம்மன்னன் துறவியாகி மருதூருக்குச் செல்கிறான்.

பதியே தெய்வமெனக்கொண்டு அவரைத் தொழுதுவரும் சிவகலை, தனது கணவன் சாயுஜ்ய பதவியை அடையுந்தருணமே தனக்கும் அப்பதவியை யளிக்குமாறு ஈசனைத் துதிக்கிறாள். ஈசன் அவளது பிரார்த்தனையை நிறைவேற்றுவதாய் அசரீரியால் உணர்த்துகிறார். திருவெண்காடர், திருவிடைமருதூரை அடைந்து கீழ்க் கோபுரவாயிலில் நிஷ்டையிலிருக்கும் சமயம் சிவபெருமான் ஓர் வயோதிகப்பிராம்மணர் உருக்கொண்டு தோன்றி, பிக்ஷை கேட்கிறார். அவர் மேலக் கோபுர வாயிலுள்ள சம்சாரியிடம் சென்றால் பிக்ஷை கிடைக்கும் எனக்கூற, அவர் அவ்விதமே மேலக் கோபுரவாயிலடைந்து, பத்திரகிரியாரைக்கண்டு, திருவெண்காடர் உரைத்ததைக் கூறுகிறார். அவர், இரந்துண்ணும் ஓடும், தன்னிடமுள்ள நாயுமா தன்னை சம்சாரி ஆக்கிவிட்டதெனக்கூறி பிக்ஷா பாத்திரத்தை வீசி எறிய, அது நாயின்மேல்பட்டு, நாய் இறக்கிறது. இறந்த அந் நாய் காசிராஜனுக்கு மகளாய்ப்பிறந்து, சில வருஷங்கள் கடந்து, மீண்டும் பத்திரகிரியாரை யடைய, அவர் அந்த நாயடியாளை அழைத்துக்

கொண்டு திருவெண்காடரிடம் செல்கிறார். இவர்கள் மூவரும் ஆண்டவன் ஆலயத்துள் செல்ல, அங்கு ஓர் ஜோதி தோன்றி பத்திரகிரியாரையும் நாயடியாளையும் ஐக்கியஞ் செய்து கொள்கிறது. திருவெண்காடர் ஈசனது கருணைக்குப் பாத்திரமாவதெக்காலம் என வருந்த, எம்பெருமான் “வெண்காட! பேய்க்கரும்பு இனிக்குமிடம் உன் முக்திக் குகந்த இடம் நீ ஒற்றியூர் அடைதி” என அசரீரியாய் மொழிய, அவர் ஈசனது அருள் ஆணையைக் கேட்டகமகிழ்ந்து, திருவாரூர், திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், திருக்காஞ்சி, திருக்காளத்தி முதலிய திவ்ய ஸ்தலங்களுக்குச் சென்று, திருவொற்றியூரடைகிறார். அங்கு ஓர் சோலையின் வேலியில் பேய்க்கரும்புகள் இருக்கக்கண்டு அவைகளில் ஒன்றைப்பறித்து, சுவைத்துப்பார்த்து, அது இனித்தமையால், அத்தலமே தனது முக்திக்குகந்தயிடமென ஆனந்தமுற்று, கடற்கரை சேர்ந்து, அங்கு விளையாடிக் கொண்டிருந்த இடைப்பிள்ளைகளுடன் சிறிது சிரித்து விளையாடி, ஓர் சாலைக்கொண்டு தன்னை மூடும்படி கூறுகிறார். அவர்கள் அவ்விதமே மூடி, சாலை எடுக்க முயலுகையில் சால் அசையாதது கண்டுத் தயங்குகின்றனர். திருவெண்காடர் ஒற்றியூர் அடைந்திருப்பதை அசரீரியால் உணர்ந்த சிவகலை அங்கு சேர்ந்து தனது பதியை நினைந்து துதித்து நிற்க, சால் தானாகவே மேல் எழ, சாலுக்குள்ளிருந்த திருவெண்காடர் லிங்கமாகவும், சிவகலை ஓர் வில்வமரமாகவும் ரூபம் பெறுகின்றனர். வில்வமரத்தடியமர்ந்த திருவெண்காட்டடிகளின் லிங்க மூர்த்தியை கோபாலர்கள் கைக்கூப்பி வணங்கி துதிக்கின்றனர்.

ஓம் தத் சத்.



ௐ

# பட்டினத்தார்.

## பாட்டுகள்.

---

1 நாந்தி.

இராகம்: பீன்பிளாஸ் தாளம்: த்ரிதாள்

ஓம் கணநாதா துதிப்பவர் துணைவனே தூயா
அருளாதரவே மங்களம் பெறவே
கருணாகர விநாயகா நமோ
சரவண வேலா அருள்தர வா வா
உமா ஸ்ரீதேவீ மைந்தா யெந்தாய்
புவன ரக்ஷகா ஈசா பாபவிநாசா
சிவ ஹர ஹர மஹேசா
அடியார் நேசா அடியார் தாசா
அடியார் வாசா ஸ்ரீ சர்வேசா (ஓம் கண)

இராகம்: யமன் தாளம்: த்ரிதாள்

2 கைலை மேவு மீசா நேசா
சங்கரா சம்போ
சோதியே சுபம் பிரகாசா
சாதுசங்க சுக விகாசா
சுகிர்த மீவாய் தூயா நேயா
சங்கரா சம்போ

3 குபேரன்.

இராகம்: மோஹனம் தாளம்: த்ரிதாள்

பல்லவி

அரவாபரணா அகில ஜீவாதாரா
ஆனந்தமானேன்

அநுபல்லவி

பிறவிக்கடலில் நான் மூழ்கி தவிக்கும்போது
மறந்திடாதெனைத் தடுத்தாட்கொள்ள வேணும் (அர)

4 தாஸி.

இராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி

கண்ணிகள்

சீராரும் வைசிய குலம் சிறப்புற்றோங்கிடும்
சிவநேசன் மகிழ வந்த செல்வனே தாலேலோ
திருவே யென் செல்வமே தெவிட்டாத செந்தேனே
மருவே மலர்க்கொழுந்தே மாமணியே தாலேலோ (சீரா)

5 திருவெண்காடர்.

இராகம்: சையிந்தவி தாளம்: ஆதி

பல்லவி

கதி நீ யல்லால் பதியே தெந்தாய்
கிருபாகரா சிவா (கதி)

அநுபல்லவி

மதியாதுனை யிதுநாளுமே
வந்தேனுயினும் மைந்தனல்லவோ (கதி)

சரணம்

அயன் மாலரன் யாவும் நீயே
அண்டினேன் எனை ஆண்டருள் செய்வாயே
சுயஞ்சோதியே சுகவாரியே
சுந்தரர்க்கருள் தந்தவர் நீயே

6 பண்டாரம்.

இராகம்: காப்பிஜில்லா தாளம்: த்ரிதாள்

கண்ணிகள்

காயமே பொய்யடா காற்றடைந்த பையடா
மாயனுர் குயவன் செய்த மண்பாண்டம் ஓடடா
உப்பு மண்ணும் ஓட்டை மூங்கில் ஓட்டிவைத்த கூடடா
உளுத்த நரம்பும் வெளுத்த தோலும் இழுத்துக்கட்டிய
கூடடா (காய)

7 திருவெண்காடர்.

இராகம்: பாகேஸ்வரி தாளம்: த்ரிதாள்

பல்லவி

தேகமே நிலையா லோகவாழ்வே
மோகபோகமோ பகல்கனவே (தேக)

அநுபல்லவி

காயமிலாத உலகவாழ்வினை
தூய அடியவர் கூறியதே மெய் (தேக)

8 **திருவெண்காடர்—சிவகலே.**

இராகம்: தன்யாஸி தாளம்: ஆதி

பல்லவி

சம்போ கங்காதரா சக்திதரா
எம்பாலிச் சோதனேயோ இதுவோ (சம்)

அநுபல்லவி

அம்புவிமீதிலுன் நாமமே புகல
அளித்த நாதனே யுனே யுபாசித்தோம் (சம்)

சரணம்

சேயார் மாய்கையிலுழன்ற யெம்மனமது
தூயாதுரியனே தொண்டரின் அற்புதா
மாயமானயித் தேகமு முணரா
மார்க்கமு மறிகிலோம் ஐயனே ஆளினி (சம்)

9 **மருதவாணன்.**

இராகம்: பியாக் தாளம்: ஆதி

ஆடிப்பாடி விளேயாட வாரீர்
வேடிக்கையின் சில சௌக்யமும் பாரீர்
கடலில் சவாரி படகினிலேறி
சிவநேசா சோம சுந்தரேசா

10 **படகோட்டி.**

இராகம்: தெம்மாங்கு மெட்டு தாளம்: ஆதி

பொழுதுபோகும் நேரமாச்சு
போகவேணுமே பாயை தூக்குமே
போயிகடல் பாக்கணுமே—ஐலசா
ஆத்து ஓட்டுப்பார்த்து தள்ளு பள்ளத்தாக்குலே
மெல்ல சேர்க்கவே
ஆன துடுப்பாலே தள்ளு—ஐலசா
மேடு மலே பார்த்துப்போக வேணு மச்சான்
மெள்ளப் பாக்குப் பையை எடுத்தா மச்சான்
காடு கரை யோரமாகச் செல்லு மச்சான்
காணும் ஒரு தீவு ஓரம் நில்லு மச்சான்—ஐலசா (பொ)

11 **சிவ லீலை.**

இராகம்: யமன் தாளம்: தீப்சந்

தாண்டவம்புரி கூடலம்பதி சம்புவே சிவசங்கரா
சம்புவே சிவ சங்கரா வுனை நம்பினேன் அருளும் பரா
ஆண்டவா வெனை யாதரிப்பவர் யாருமில்லை ஜடாதரா
யாருமில்லை ஜடாதரா துயர் தீரும்வழி சொல் கங்காதரா

தொகையறு

அன்று மார்க்கண்டனுக்காகவே தரிசனம்
அன்புடன் அளித்ததேவா
அடியாளின் மிடிகண்டு மனுகாதிருப்பதும்
அழகோ மஹானு பாவா

பாட்டு

பக்தியாய் துதி பாடும் பாவலர்-பாவணி திரு மூர்த்தியே
பாவணி திருமூர்த்தியே-வுனைக்கூவினேன்
மிகவாழ்த்தியே (தாண்ட)

12 **மருதவாணன்.**

இராகம்: பீன்பளாஸ் தாளம்: த்ரிதாள்

கவலைத்தீருமையா-இளியே
சாந்தமனோஹரரே ஆள்பவரே (கவலை)
கார்க்குமவனே கதியென அறிவீர்
இன்றே நேரில் இனிய புண்யா (கவலை)

13 **திருவெண்காடர்.**

இராகம்: காளிங்கடா தாளம்: த்ரிதாள்

பார்வதி நாதா விதியிதோ சகித்திடேன் ஆஹா அரனே
கார்ப்பாயே எளியனும் எனையே
சோதனை சரியோ
காராய் கருணாகர சீலா பார்வதி)

14 **திருவெண்காடர்.**

சரித்திரப்பாடல்—விருத்தம்—வசன நடை

பட்டைக்கிழித்து பருவூசி தன்னைப் பரிந்தெடுத்து
முட்டைச்சுருட்டி என்மோய் குழலாள் கையின்முன் கொடுத்து
கட்டியிருந்தக் கனமாயக்காரி தன் காமமெல்லாம்
விட்டுப்பிரியவென்றோ விங்ஙனே சிவன் மீண்டதுவே

15 சூதுற்ற கொங்கையு மாணார்கல்வியும் சூழ்பொருளும்
போதுற்ற பூசலுக்கென் செயலாஞ் செய்த புண்ணியத்தால்
தீதற்ற மன்னவன் சிந்தையினின்று தெளிவதற்கோ
காதற்ற ஊசியைத் தந்துவிட்டான் என்றன் கைதனிலே

16 வேதத்தினுட்பொருள் மண்ணாசை மங்கையைவிட்டு விட
போதித்தவன்மொழி கேட்டிலையோ செய்த புண்ணியத்தால்
ஆதித்தன் சந்திரன்போல் வெளிச்சமதாம்பொழுது
காதற்ற ஊசியும் வாராது காணுங்கடை வழிக்கே

17 ## திருவெண்காடர்.

சரித்திரப்பாடல்—வசண நடை.

அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே விழியம் பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மி இரு
கைத்தலைமேல் வைத்தழு மைந்தரும் சுடுகாடு மட்டே
பற்றித்தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே

18 ## திருவெண்காடர்.

இராகம்: ஆனந்தபைரவி — தாளம்: ஆதி

பல்லவி.

தேகம் நிலையல்லவே-மானிட (தேகம்)

தெளிவுடனறி (தேகம்)

ஜகந்தனிலே மிகுந்தழியும் (தேகம்)

திடங்கொண்டயமன் வந்தபோதினில்
அடங்குன்றியடியுடன் மடியும் (தேகம்)

தேனொழுகச்சொல் மனைவி மக்களும்
தானழுகப்பின் சவமெனயிகழ் (தேகம்)

தெரியவர் விரும்பும்
சிறுநகை யரும்பும் ஜெகன் மோகன மா (தேகம்)

திருடத் துணிகிற முரடற்குதவிடல்
குருடத்தனமெனும் (தேகம்)

தெய்வமென்று நம்பிடாது பலவித
பொய் புகன்று வெம்பி வாடுகிற (தேகம்)

அநுபல்லவி.

மோகலோப மத மூடமாச்சர்யம்
மோதுகின்ற பெருங் குரோதமே புரிய
தாகமோடலையும் காமசாதுரிய
தந்திரமோது பஞ்சபூத வதிசயம்
தாழ்ந்து-தரைதனில் வீழ்ந்து
சக்தியற்ற கட்டையாகிவிடும் (தேகம்)

சரணம்.

அறுசுவையன்னம் பாலுடன் முக்கனி
அருந்தி மகிழ்ந்த சிறந்த வாயினில்
பெருசுவையற்றிடு நெற்பதரைப்பலர்
பிணக்கியெடுத்துக் கணக்கிலொருபிடி போடுவர்
அணியுந் தங்கப் பணியும்பட்டு
துணியும் மரகத மணியும் நீக்குவர்

அத்தினந்தனிலொரு வத்திரஞ்சுற்றியே
அடுக்கிநிறை வறட்டித்தனைக்கொடு மூடுவார்
அடுக்குமாடிசேர் அரண்மனை யெங்கே
யானை குதிரை பல்லக்குகள் எங்கே
படுக்கும் கட்டில் மலர்மெத்தைகள் எங்கே
பரிமள களப கஸ்தூரிகளெங்கே
பாக்ய மெங்கே போக போக்ய மெங்கே-வுன்றன்
யோக்கிய மெங்கே-கற்ற வாக்யமெங்கே-சுடு
காடு மட்டும் வெகு மேள தாளமுறும்
கனலை மூட்டிய பின் புனலை யாட்டியவர்
வீடு கட்டுகையிலே மறந்து புது
வினையிலே தமது நினைவிலே திரிவர்
வேண்டும் பாவலர் தூண்டும்
துறவறம் யாண்டும் பெறுகு வீர் (தேகம்)

## 19 திருவெண்காடர்.

சரித்திரப் பாடல்—வசன நடை.

ஒன்றென்றிரு தெய்வமுண்டென்றிரு உயர் செல்வ மெல்லாம்
அன்றென்றிரு பசித்தோர் முகம் பார் நல்லறமும் நட்பும்
நன்னென்றிரு நடு நீங்காமலே நமக்கிட்டபடி
யென்னென்றிரு மனமே யுனக்கே வுபதேசமிதே

20 **திருவெண்காடர்.**

இராகம்: கேதாரம் தாளம்: ரூபகம்.

தேவாரம்—பண்

“வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதான்
தாழாதறம் செய்மின் தடங்கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான்றிருக் கேதாரமே நீரே”

21 **பண்டாரம்.**

திருவாசகம்—அடைக்கலப்பத்து.

செழுக்கமலத்திரளன நின் சேவடி சேர்ந்த மைந்த
பழுத்த மனத்தடியருடன் போயினர் யான் பாவியேன்
புழுக்கணுடைப்புன் குரம்பைப் பொல்லாக் கல்விஞானமிலா
அழுக்கு மனத்தடியேனுடையாம் உன்னடைக்கலமே.

22 **வேட்டியான்கள் தர்க்கம்.**

**பாளையம்.**

இராகம்-யதுகுலகாம்போதி தாளம்: திஸ்ரகதி

பாழும் பணத்தினாலே கெட்டுபோயி ரொம்பப்பேரு
இழிகோலம் வந்து நாசமானாரே—அது
வாழும் வகை தெரியா சும்மா பேசாதே—அப்பா
வாழும் வகை தெரியா சும்மா பேசாதே

**பச்சை.**

கண்ணாளம் கல்லெடுப்பு நல்லது பொல்லாத்துக்கும்
எல்லாத்துக்கும் காசு மெத்த வேணுமே—அது
இல்லாமே போனா மானம் போகுமே—அது
அல்லாமே போனா தாளம் போடுமே

**பாளையம்.**

கிண்ணாரம் கொட்டிகினு கேலிசெஞ்ச ஆண்டமாரு
கிட்டிச் சுடலை வரவேணுமே—அதை
எண்ணாமே போறார் இந்தக்காலமே—செத்தா
வந்தே சேரவும் இங்கேதானுமே

23 **திருவெண்காடர்.**

சரித்திரப்பாடல்—வெண்பா ராகம்: முகாரி.

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்து பெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்திலேந்திக் கனக முலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேனினி

வருவது போவதொரு முதுகெனு மந்தி யெனும்படி குந்தி நடந்து
கலகலவென்று மலசலம் வந்து கால்வழி மேல்வரு சாரநடந்து
தெளிவுமிராமல் உரைதடுமாறி சிந்தையு நெஞ்சு முலைந்து மருண்டு
மறையவன் வேத மெழுதிபவாறு வந்தது கண்டமுமென்று
தெளிந்து
கடைவழிகஞ்சி ஒழுகிடவந்து பூதமும்நாலு சுவாசமும் நின்று—
நெஞ்சுதடுமாறி வரு நேரமே

வளர் பிறை போல வெயிலுமுரோமமுஞ் சடையுஞ் சிறு
குஞ்சியும் விஞ்ச
மனது மிருண்ட வடிவுமிலங்க மாமலைபோல் எமதூதர்கள் வந்து
வலை கொடுவீசி உயிர்கொடுபோக மைந்தர் பணிவியும் குனிந்தழ
நொந்து
கழிகி நடந்து சுடலை யடைந்து கட்டையால் மூடியே அழல்கொடு
போட
உருகி யெலும்பு கருகியடங்கி ஓர் பிடி நீறுமிலாத உடம்பை
நம்புமடியேனை இனியாளுமே

## 31 முனியாண்டி-சுப்புத்தாய் தர்க்கம்.

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஆதி

முனியாண்டி :—
ஏண்டி சுப்புக்குட்டி யின்னேரமென்ன செய்தடி சொல்லு

சுப்புத்தாய் :—
சும்மா கோபிக்காதே வீட்டில் விருந்தாளி வந்திடலாச்சு

முனியாண்டி :—
சொன்ன சொல் மீறி சோக்குடன் போயி சொகுசுடன்
வந்தாய்-போ

சுப்புத்தாய் :—
மருதையிலிருந்து சின்னதங்கச்சி புருஷன் வந்தான் கேள்

முனியாண்டி :—
நீ கிட்ட நெருங்காதே

சுப்புத்தாய் :
நீ கோபஞ் செய்யாதே

முனியாண்டி :—
இருட்லே ஏன் வந்தே

சுப்புத்தாய் :—
நான் பார்த்துகிட்டே யிருந்தேன்

[illegible]:—

ஜூம் ஜும் கும்மா கும்மா கொடுப்பேனே

சப்புத்தாய்:—

அப்பப்பா அப்பா அப்பா தானேனே!!

32 திருவெண்காடர்.

இராகம்: கரகரப்ரியா சரித்திரப்பாடல்—விருத்தம்.

பூணும் பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல, மங்கையர்க்கல்ல நற்காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவனடிக்கல்ல என் சிந்தை கெட்டுச்
சாணும் வளர்க்க வடியேன் படுந்துயர் சற்றல்லவே

33 திருவெண்காடர்.

சரித்திரப்பாடல்—வெண்பா வசன நடை.

இருக்குமிடந்தேடி யென் பசிக்கே யன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தாலுண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகேன் அரனே—என்தேகம்
இளைத்தாலும் போகேனினி

34 கள்வர்கள்.

இராகம்: யமன் தாளம்: த்ரிதாள்.

கோரஸ்: பாட்டு.

தொந்தி கணேசா யெங்களைக்காத்து லாபம் பண்ணையா
குந்தித் தோப்புக்கரணம் எண்ணிபோடுரோ மய்யா

கள்வர் தலைவன்: தொகையறு.

போகச்சே ஜெயமாச்சுதா மெய்யான பேச்சிது

கோரஸ்: பாட்டு.

பொன்னூமுனக்கு பாகமாய் நேசமாய்த்தாரோமய்யா

கள்வர் தலைவன்: தொகையறு.

கூட்டாளியாவாய் உம்மிட பெருச்சாளி மேலே யேறி

கோரஸ்: பாட்டு.

காட்டு கணேசா யெங்கள் பாட்டன்கால சாமியே (தொந்தி)

35 திருவெண்காடர்.

இராகம்: பியாக் தாளம்: ஆதி.

பல்லவி.

இதுதானே நல்லயிடம் ஏகாந்த யோகஞ் செய்ய (இது)

அநுபல்லவி.

பொதுவானதோரிடம் புலன் களைந்து மடக்கி
பதுமா சனமிட்டு பரமனை தியானிக்க (இது)

36 பத்திரகிரி மன்னன.

இராகம்: கானடா தாளம்: ஆதி.

பல்லவி

கோமளமே குயிலே கனியே யினி
கோபம் விடுத்தருகே வருவாயென்றன் (கோமளமே)

அநுபல்லவி

தாமரை வதனி சாஹஸமேனே
தயவு நீ புரி உத்தமி ததியே இளங் (கோமளமே)

சரணம்.

கெஞ்சிடும்போது கொஞ்சிடலாது
சஞ்சலமிகத்தீது சேர்திலா (கோமளமே)

37 திருவெண்காடர்.

இராகம்: கேதார கௌளம் சரித்திரப்பாடல்—விருத்தம்.

என் செயலாவது யாதொன்றுமில்லை இனித்தெய்வமே
உன் செயலே என்று உணரப்பெற்றேன் இந்த ஊன் எடுத்த
பின் செய்த தீவினை யாதொன்றுமில்லை பிறப்பதற்கு
மூன் செய்த தீவினை இங்ஙனே வந்து மூண்டதுவே

38 பத்திரகிரியார்.

கண்ணிகள்—இராகமாலிகை.

ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச்சுட்டறுத்து
தூங்காமல் தூங்கி சுகம்பெறுவதெக்காலம்
மாயாப்பிறவி மயக்கத்தை யூடறுத்துக்
காயாப்புரிக் கோட்டை கைக்கொள்வதெக்காலம்
என்னையே நானறியேனிந்த வண்ணஞ்
சொன்னதெல்லாம் முன்னையோர் கைக்கொள்வதெக்காலம்

39 திருவெண்காடர்.

இராகம்: மாண்டு. தாளம்: த்ரிதாள்

தெருவில் நான் போவதில்லை—திருவோடுகையில் இல்லை
தருமேனே பிச்சையிங்கே—சிவமே
தள்ளாவிருந்தாக வந்தீர்

40 இராகம்: ஹிந்து அசாவேரி தாளம்: த்ரிதாள்

கோவணமே பாரமாய்
கொண்டிருக்கின்றபின்னால்
தேவரீர் பசி தீருமோ—சிவமே
தெய்வமே நின் சோதனையோ (கோவ)

41 சிவகலே.

திருவருட்பா—இராகமாலிகை.

உன்னை மறந்திடுவேனோ மறப்பறியேன்
மறந்தாலுயிர் விடுவேன் உன்றனை யிது நீ
என்னை மறந்திடுவாயோ மறந்திடுவாயெனில்
யானென்ன செய்வேனெங்குறுவேன்
எவர்க்குரைப்பேன் எந்தாய்
அன்னையினும் தயவுடையாய் நீ மறந்தா யெனினும்
அகிலமெலாமளித்திடும் நின்னருள் மறவாதென்றே
இன்னுமிகக் களித்திங்கே யிருக்கின்றேன் மறவே
னிதுதருணம் அருட்ஜோதி எனக்கு விரைந்தருளே

42 திருவெண்காடர்—பத்திரகிரியார்.

தேவாரம்-பண் இராகம்: காகாப்ரியா தாளம் திரிபுடை

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக் குய்ப்பதும்
வேத நான்கினும் மெய்ப்பொருளாவதும்
நாத நாம நமச்சிவாயவே (காதலா)

43 திருவெண்காடர்

இராகம் உமாபரணம் தாளம்: ஆதி

பல்லவி.

கருணை வல்லையோ யின்றும் கௌரீமணாளனே
தாரணி வாழ்வினி தானோனே (கருணை)

அநுபல்லவி.

அருமறைக் கெட்டாத அகில ஜீவாதரா
ஆதியந்த மேதிலானே ஆலமுண்ட மாவுதாரா (கருணை)

44 திருவாரூர் - சரித்திரப்பாடல்—இராகம் - சரஸ்வதி.

வடிவந்தானும் வாலிபம் மசளுந்தாயும் மாமியும்
படிகொண்டாருமூரிலே படிகொண்டாடல் னீதியோ
குடிவந்தானுமேழையோ குயவன்றானுங் கூழையோ
நடு நின்றானும் வீணனோ நகரஞ் சூறையானதே,

45 திருவெண்காடர்.

இராகம்: சக்ரவாகம் தாளம்: ஆதி

திருவண்ணாமலே-பண்-நட்டபாடை.

தேமாங்கனி கடுவன்கொள் விடு கொம்பொடு தீண்டி
தூமா மழைத் துறுவன் மிசை சிறு நுண்டுளி சிதற
ஆமாம்தனை யணையும்பொழி லண்ணாமலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினை யிலதே

46 திருவெண்காடர்.

திருகாளத்தி சரித்திரப்பாடல்—இராகம்: கல்யாணி.

விருத்தம்.

வாளான் மகவரிந்தூட்ட வல்லேனல்லன் மாது சொன்ன
சூளாலிளமை துறக்க வல்லேனல்லன்—தொண்டு செய்து
நாளாறிற் கண்ணிழந்தப்ப வல்லேனல்ல ஞனினிச்சென்று
ஆளாவ தெப்படியோ திருகாளத்தியப்பருக்கே

47 திருவெண்காடர்.

திருக்கழுக்குன்றம் சரித்திரப்பாடல்—நாதநாமக்கிரியை.

காடோ செடியோ கடற்புறமோ கனமே மிகுந்த
நாடோ நகரோ நகர்நடுவோ நலமே மிகுந்த
வீடோ புறத்திண்ணையோ தமியேனுடல் வீழுமிடம்
நீடோய் கழுக்குன்றிலீசா உயிர்த்துணை நின்பதமே

48 திருவெண்காடர்.

காஞ்சீபுரம் - சரித்திர பாடல் இராகம்: சிந்து பைரவி.

கைப்பிடி நாயகன் தூங்கையிலே அவன் கையை
அப்புறந்தன்னில் அசையாமல் முன்வைத்து அயல் வளவில்
ஒப்புடன் சென்று துயில் நீத்துப்பின் வந்து உறங்குவாளை
எப்படி நான் நம்புவேன் இறைவா கச்சியே கம்பனே.

49 திருவெண்காடர்.

திருவொற்றியூர்-சரித்திரப்பாடல்-வெண்பா இராகம்: சங்கராபரணம்

கண்டங்கரியதாம் கண்மூன் றுடையதாம்
அண்டத்தைப் போல அழகியதாம்—தொண்டர்
உடலுருகத்தித்திக்கும் ஒங்குபுக ழொற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு

50 சிவகலை

விருத்தம் இராகம்: கமாஸ்.

உயிரதை நீத்து உடல் உலகினிலிருப்பதுண்டோ
கயிலை நாதன் கழல் சேர்ந்திடுமிவ்வேளை நாதா
வயிறதை வளர்த்து வீணே மண்ணிடை யுழலா வண்ணம்
தையலாள் தனையுமின்றே தயாபரன் தாள் சேர்ப்பீரே

51 இராகம்: ஹிந்துஸ்தான் சுருட்டி தாளம்: த்ரிதாள்

ஜெய ஜெய சிவபதமே சதமெனவே
சுகமுறு துறவறந் தாவிய தனபதி
திருவடி மனதினி லனுதினந் துதிப்போம் (ஜெய)
சகல பாபஹர சுகாதீதனே
கௌரீ நாதா க்ருபா சுரத நீதனே
கழலடிகள் வாழி குவலயம் வாழி
சுவேதாரண்ய சுரீபாதனடி சதாவாழியே. (ஜெய)

ஓம் தத் சத்.